வைத்திய சந்திரிகா
Dec 1958

JL
LBM 211. N 39
N58 ·20·12
188872

981
4.58

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

MADRAS
1958

DECEMBER
1958



சுருதி 20
பகுதி 12

Vol. 20
No. 12

ஆசிரியர் :
பண்டித ஸ்ரீ. மெ. ஸௌந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்.
உப ஆசிரியர் & பிரசுரகர்த்தா:
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.

பொருளடக்கம்

விசேஷ மஹாநாட்டின்
நடவடிக்கைகள்.

Annual
Subscription
Rs. 5/-

3L
N58:2012
188872

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# நீலீபிருங்காதி தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கும் எல்லா கால நிலைகளிலும் ஆரோக்கியமான கூந்தல் வளத்திற்கும் மெருகுக்கும் அனைவராலும் பாராட்டப் பட்டது.

தயாரிப்பாளர்கள்:

## ஆர்ய வைத்தியசாலா

(ஸ்தாபிதம்: 1902)

**கோட்டக்கல். (கோழிக்கோடு ஜில்லா)**

கிளைகள்: கோழிக்கோடு (போன் 155) திரூர் (போன் 31), பாலக்காடு (போன் 104), ஈரோடு, மற்றும் எர்ணாகுளம். விற்பனை டிப்போ: பாலக்காடு (வெட்டிகுளம் ரோட்).

600-க்கு மேற்பட்ட தரமான ஆயுர்வேத மருந்துகள் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகின்றன. எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் சிறந்த ஆயுர்வேத சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. நவரக்கிழி, தாரா, பிழிச்சல் முதலான விசேஷ கேரள முறைகளும் கோட்டக்கல்லில் எங்கள் **கோல்டன் ஜுபிலி நர்ஸிங் ஹோமில்** மிதமான கட்டணங்களில் அளிக்கப்படுகின்றன. நேரில் ஆலோசித்தோ அல்லது தபால் மூலமோ, எமது பிரதான வைத்தியர் சிகித்சையும், மருந்தும் அளிப்பார்.

மேல் விவரங்களுக்கு தயவு செய்து

மானேஜிங் டிரஸ்டிக்கு எழுதவும்.

---

# A WORD OF ADVICE

If You are ever in need of Pure Musk, Saffron, Shilajit, Hing, Pearls & Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with Un-Known and Un-Reliable Firms

*Have your requirments from :—*

**KALIA BROTHERS (Regd.)**

5C/9, ROHTAK ROAD, NEW DELHI—5.

OR

**KALIA BROTHERS (Regd.)**

JULLUNDUR CITY—N. INDIA.

* * *

## ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜித், பெருங்காயம், முத்து, ஹிமாலய மூலிகைகள் முதலியன உங்களுக்குத் தேவையானால்—

முன் பின்னறியாததும் நம்பிக்கையில்லாததுமான ஸ்தாபனங்களோடு ஒருபோதும் பரிசோதனை செய்ய வேண்டாம்.

உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:

**கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)**

5 C/9, ரோஹ்தாக் ரோடு, புது டில்லி—5.

அல்லது

**கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)**

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலா: 28, A. தென்னூர் ரோடு. திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபிஸ்: 31, சின்னக்கடைத் தெரு. திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன,

வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ மருந்துகள்

**1 பூர்ணசந்த்ரோதயமகரத்வஜம்— மாத்திரைகள்,**

(பைஷஜ்ய ரத்நாவளி—வாஜீகரணாதிகாரம்.)

ஆயுர்வேதத்திற்கே தனிப் பெருமையளிக்கும் ஓர் ப்ரஸித்தமான யோகம். இதில் சேரும் தங்கம் எமது விசேஷத் தயாரிப்பு முறைப்படி மகரத்வஜ ரஸத்துடன் இரண்டறக் கலந்துவிடுவதால் இது மிகவும் சிறந்த ரஸாயனமாகிறது.

கஸ்தூரி தங்கம் இவ்விரண்டும் 40-ல் ஒரு பங்கும். மகரத்வஜ ரஸம், குங்குமப்பூ, பச்சைக்கர்பூரம் முதலியவை 5-ல் ஒரு பங்கும் சேர்த்துத் தயாரிக்கப் பட்ட மாத்திரை.

எல்லா வாத விகாரங்களிலும் ஞாபகமறதி மனக்களைப்பு சரீரத் தளர்ச்சி ரக்த அமுக்கக் குறைவு ரக்த அமுக்க மிகுதி போன்ற திரிதோஷங்களின் இயற்கைச்செயல் மாறுதல்களால் ஏற்படும் நோய்களிலும் கைகண்டது. சிறந்த ரஸாயனம், வாஜீகரணம்.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, மானேஜிங் டைரெக்டர்






ஸ்ரீ தந்வந்தரயே நம:


# வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| தொகுதி 20 Vol. 20 | விளம்பி – ஐப்பசி – கார்த்திகை DECEMBER 1958 | பகுதி 12 No. 12 |
|---|---|---|


आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

## சூழ்நிலையில் மாறுதல் தேவை.

நாட்டின் சுகாதாரப் பணியில் ஆயுர்வேதத்திற்குள்ள பெரும் பங்கு — இந்நாட்டின் சரித்திர காலத்தை யொட்டிய பழம் பெருமை காரணத்தால் மட்டுமின்றி இன்றையத் தேவைக்குப் பூர்ணமாக அது உதவுவதால் — நிலைத்து நிற்கிற தென்பதைச் சர்க்காரும் பொது மக்களும் நன்கு உணர்ந்துள்ளனர். சர்க்கார் அதன் அபிவிருத்திக்கான திட்டங்களையும் வகுத்து மான்யங்களையும் வழங்கி வருகின்றனர்.

ஆயுர்வேத அபிவிருத்தி விஷயமாக சென்னை சர்க்கார் கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவில் முதன்முதலாக வழி வகுக்க முற்பட்டனர். கனம் உஸ்மான் அவர்களின் தலைமையில் கூடிய கமிட்டி தனது யாதாஸ்தில் நாட்டின் நலனுக்கு ஆயுர்வேதம் முதலிய தேசீய முறைகளின் வளர்ச்சி மிக அவசியத் தேவை என்பதை அரசாங்கத்திடம் வற்புறுத்தியதன் பேரில் அதன் தரத்தை உயர்த்தக் கல்வி, தொழில்

18872

முறையில் பதிவு முதலியவைகளில் சட்ட திட்டங்களை வகுத்து இந்திய வைத்யக் கல்லூரியையும் ஏற்படுத்தினர். இந்திய வைத்யக் கல்லூரி ஏற்படுத்து முன் தொழில் புரிந்து வந்த வைத்யர்கள் பெற்ற வைத்யக் கல்வி பல தரப்பட்டதாக இருந்து வந்ததாலும், அவர்களை ஒருவகைப்படுத்த முடியாமையாலும் B வகுப்பில் பதிவு என்ற தாற்காலிக ஏற்பாட்டை அரசாங்கம் செய்தது. கால க்ரமத்தில் சீர்திருத்திய கல்வி முறைப்படி அரசாங்கம் தேசீய முறைகளின் கல்வியைப் பரப்பி இந்த B வகுப்பு ஏற்பாட்டை ரத்து செய்து விடும் என்று வைத்ய உலகம் எதிர்பார்த்தது. ஆரம்பத்திலிருந்தே அரசாங்கம் கடைபிடித்த வழியில் தவறு ஏற்பட்டு விட்டதால் — அதாவது தேசீய வைத்ய இலாகாவைத் தனியாகப் பிரிக்காததாலும் தேசீய வைத்யர்களையே கல்லூரி—இலாகாத் தலைவர்களாக நியமிக்காமல் அலோபதிகர்களையே நியமித்ததாலும், இந்திய வைத்ய அபிவிருத்தியாகிற லக்ஷ்யத்தில் பற்றுதல் குறைந்து தேவை பூர்த்தி என்ற போலிக் கொள்கை வற்புறுத்தப்பட்டு தேசீய வைத்ய முறைகள் தன்னளவிலே அபிவிருத்தியடைவதில் தடை புகுத்தப்பட்டது. நாட்டின் சுதந்திரத்திற்குப் பின்பும் இந்திய வைத்ய அபிவிருத்தி என்ற கல்லூரியின் லக்ஷ்யம் புறக்கணிக்கப்பட்டு இன்று அது சென்னையின் மூன்றாவது ஆனால் கீழ்த் தரமான அலோபதிக் கல்லூரியாக மாறிய துர்தசையில் நிற்கிறது.

ஒரு காரியத்தில் லக்ஷ்ய ஸித்தி பெற லக்ஷ்யத்தில் மாறாத நம்பிக்கையும் அளவற்ற பற்றும் அவைகளைச் செயலாற்றும் திறனும் மிகவும் அவசியமாகிறது. மாறுபட்ட கொள்கையும் தனது காரியத்தில் நம்பிக்கையின்மையும் பற்றின்மையும் காரணமாக அலோபதி நிர்வாஹம் தேசீய வைத்ய முறைகளின் வளர்ச்சியில் சிறிதும் ஈடுபடாததோடு மட்டுமின்றி, இன்று தமிழ் நாட்டில் அதற்குரியதான ஸ்தானத்தையும் அபஹரிக்க வழி செய்து விட்டது. இதனால் அலோபதியினரை நாம் குறை கூறவில்லை. அரசாங்கத்தையும் குறை கூறவில்லை. அரசாங்கம் கடைபிடித்த வழியில் உள்ள சிறிய — ஆனால் மிகுந்த கொடுமை விளைவிக்கக் கூடிய — தவறு முப்பதாண்டுகளுக்குப்



பின்னர் கூட லக்ஷ்ய ஸித்திக்கு இடையூறாக இருக்கின்றது என்பதைத் தான் இங்கு குறிப்பிடுகிறோம்.

கனம் சுகாதார மந்திரி அவர்கள் சிலகாலமாக ஆயுர்வேதத்தையும் அலோபதியையும் இணைத்துக் கொடுத்து வரும் கல்வி பயன் தரவில்லை என்பதோடு மட்டுமின்றி மேலும் சில அந்தஸ்து சம்பந்தப்பட்ட பிரச்னைகளையும் கிளப்பி வருவதைப் பற்றிச் சிந்தித்து இவ்விணைப்பைப் பிரித்து விட யோசனை செய்வதாகத் தெரிவித்துள்ளனர். இது அன்னாருடைய தீர்க்க தரிசனத்தைப் புலப்படுத்தும். இவ்விணைப்பைப் பிரிக்கும் போது மேலும் சில பிரச்னைகள் எழும்.

எந்த லக்ஷ்யத்திற்காக இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதோ, அதற்கு மாறுபட்ட வகையில் இதையே அலோபதிக் கல்லூரியாக மாற்றுவது நேர்மையல்ல; இந்திய தேசீய வைத்ய முறைகளின் அபிவிருத்தி என்ற லக்ஷ்யத்துடன், இந்திய தேசீய வைத்ய முறைகளின் அபிவிருத்திக் கென்றே சொல்லிச் சொல்லிக் கொடுத்த சர்க்கார் மான்யங்களைக் கொண்டும், தனிப்பட்ட நபர்கள் ஸ்தாபனங்களின் நன்கொடைகளைக் கொண்டும் இன்று இது இவ்வளவு அபிவிருத்தி யடைந்துள்ளது. இதை முற்றிலும் அலோபதிக் கல்லூரியாக மாற்றுவது பெருத்த நம்பிக்கைத் துரோகமுமாகும்.

இணைப்பைப் பிரிக்கும்போது கீழ்க்கண்ட ஆலோசனைகள் லக்ஷ்ய ஸித்திக் குகந்தவை என மஹாமண்டலம் கருதுகின்றது. இவ்வாலோசனைகள் கடந்த முப்பதாண்டு காலத்தில் ஆயுர்வேத இலாகா நிர்வாஹத்தை விருப்பு வெறுப்பின்றி தீர பரிசீலித்து வெளியிடப்பட்டவையாகும். இவைகளை ஏற்று அரசாங்கம் தான் வெளியிடும் சிரத்தைக் கேற்ற லக்ஷ்ய ஸித்தியைப் பெற முன் வரவேண்டும்.

1. **தனி இலாகா நிர்வாஹம்.** தமிழ் நாட்டில் இன்று சித்தம் ஆயுர்வேதம் என்ற இரு முறைகள் வைத்யர்களால் பழகப்படுகின்றன. சித்தம் என்பது தமிழ் நூல்களிலும் ஆயுர்வேதம் என்பது வடமொழி நூல்களிலும் கூறப்பட்டுள்ளது

என்ற அர்த்தமற்ற பாகுபாட்டின் அடிப்படையில் இந்திய வைத்யக் கல்லூரி தொடங்கு முன்னர் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன் அரசியல் பூசல்களின் விளைவாக இப்பிரிவு ஏற்பட்டது. மொழி வேறுபாடு இப்பிரிவிற்குக் காரணமாகாது. அடிப்படைத் தத்துவங்கள் சிகித்ஸை வழிகள் இவைகளை ஆராய்ந்தால் இவைகளின் ஒற்றுமை நன்கு விளங்கும். ஆனாலும் தமிழ் நாட்டினரின் இன்றைய தனிப்பட்ட மனப்பான்மை காரணமாக, இதிலும் அரசியல் பூசல்கள் உள் நுழையக் கூடாது என்பது காரணமாக, நிர்வாஹ ஸௌகர்யத்திற்காக இவ்விரு முறைகளையும் தனித் தனியே பிரித்தே வளர விடுவதும், அந்த அந்த முறை நிபுணர்களையே அதன் அதன் வளர்ச்சியில் ஊக்குவிப்பதும் இன்று அவசியமாகிறது. தனித் தனியே இவைகள் பெறும் வளர்ச்சி என்றும் இவ்விரு முறைகளின் பொது உடமையாகும். கால க்ரமத்தில் இவ்விரு முறையினரும் விரும்பினால் ஒன்று சேர இன்று மனக் கசப்பில்லாமல் ஒருவருக் கொருவர் உதவும் மனப்பான்மையுடன் தனித்திருத்தல் நல்லது. அதனதன் நிர்வாஹத்தில் அதனதன் நிபுணர் தான் தலைவராக நிர்வாஹியாக இருக்க வேண்டும் என்பதை மறுபடியும் வற்புறுத்துவது அவசியமாகிறது. கல்லூரி, பதிவு நிர்வாஹம், தொழிற் கட்டுப்பாடு, மேற்படிப்பு முதலிய இது சம்பந்தப்பட்ட நிர்வாஹ மனைத்தும் தேசீய வைத்ய முறை இலாகா என்ற தனிப்பட்ட இலாகாவின் கீழ் அமைதல் அவசியம். அலோபதிகர்கள் தம் வசப்படுத்திக் கொண்ட பொது மருத்துவ இலாகாவின் கீழ் இதன் நிர்வாஹம் எந்த நிலையிலும் அமையா திருத்தல் நலம்.

**2. தனிக் கல்லூரி.** வேறு முறைக் கல்லூரிகளில் மேற்படிப்பாக (Post Graduate Study) இம்முறைகளைப் போதிப்பதை நாம் வரவேற்கிறோம். அவ்வகையிலேயே சித்த ஆயுர்வேதக் கல்வி முடிந்த பின்னர் மேற் படிப்பாக அலோபதி முறையைக் கற்கவும் நாம் தயாரா யிருக்கிறோம். ஆனால் அடிப்படைக் கல்வி போதனை காலத்தில் (Under Graduate stage) சித்தத்துடனோ ஆயுர்வேதத்துடனோ அலோபதியைச் சேர்த்துக் கற்பிப்பதை நாம் எதிர்க்கிறோம். இந்த அடிப்படைக் கொள்கையை நன்கு மனதிற் கொள்ள வேண்டும்.



ஆயுர்வேதத்தையோ சித்தத்தையோ அதனதன் நிபுணர்களிடமிருந்து தகுந்த தொழில் பழக்கப் பயிற்சியுடன் கற்க வசதி கிடைக்குமாறு இன்றுள்ள இணைப்புக் கல்லூரியை மாற்றி யமைக்க வேண்டும். இன்று சென்னை ஸர்வ கலாசாலையினர் B. I. M. என்ற பாட திட்டத்தை டிகிரிப் படிப்பாக ஏற்றுள்ளனர். இதில் சித்தமும் ஆயுர்வேதமும் அதனதன் வழியில் கற்க வசதி யிருக்கிறது. ஆனால் எந்தக் கல்வி ஸ்தாபனத்திலும் இது இன்று நடை முறையிலில்லை. அதிலும் நடை முறையில் ஏதாவது சிறிய தவறுதல்கள் இருந்தால் திருத்திக் கொள்ளவோ, அதிகப்படி தேவை யிருந்தால் சேர்த்துக் கொள்ளவோ ஸாத்ய மாகலாம். இந்த பாட திட்டத்தை ஆராய்ந்து அமுலுக்குக் கொணரலாம். இணைப்பு வைத்யக் கல்லூரியிலுள்ள இணைப்பைப் பிரிக்கும் போதே இதைச் செயலாற்றுதல் அவசியம்.

தனித்து இம்முறைகளைக் கற்பிக்கும்போது சல்லியத்திலும் சாலாக்யத்திலும் கைப்பழக்கம் அற்றுவிட்ட காரணத்தால் ஏற்படும் தேவைகளைத் தாற்காலிகமாக வேறு முறை நிபுணர்களின் உதவி கொண்டு பூர்த்தி செய்து கொள்வதும், பின்னர் கைப் பழக்கப் பயிற்சி ஏற்பட்ட பின் அதில் அபிவிருத்தி செய்யவும் தொடர்ந்து பயிற்சி அளிக்கவும் இக்கலாசாலையில் தேர்ந்த நிபுணர்களையே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கால வரையறையின்றி வேறுமுறை நிபுணர்களைத் தொடர்ந்து உதவியாளராகக் கொள்வதால் ஏற்பட்ட ஆபத்து தான் இன்று இந்திய வைத்யக் கல்லூரி இணைப்புக் கல்லூரியாக மாறியதில் வந்து நிற்கிறது. இதை மனதிற் கொண்டு குறிப்பிட்ட கால வரைக்குள் வேறு முறையினரின் உதவியைக் கிரமமாகக் குறைத்து நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**3. ஆராய்ச்சி ஸ்தாபனங்கள்.** இம்முறை ஆராய்ச்சி ஸ்தாபனங்களின் இன்றைய முதல் வேலை—பாட திட்டத்திற்கேற்ப—பாட புத்தகங்களை அமைத்துக் கொடுப்பது தான். ஐந்தாண்டுகளுக்குள் மொழி வாரியான தக்க புத்தகங்கள் தயாராவதைப் பொறுத்துத் தான் பின்னால் கல்வி போதனை அமைய விருக்

கிறது. இன்று வேறு வகை ஆராய்ச்சிக்கு அவசரமில்லை. நாட்டில் தனித் தியங்கும் பல்வேறு நாட்டு வைத்ய ஸ்தாபனங்களும், நாட்டிலுள்ள வைத்யர்களும் செய்து வரும் வைத்ய ஸேவையைப் பன்மடங்காக்கத் தகுந்த பின் வாரிசுகள் தேவை. அதைச் சிரமைக்கும் பணியே இன்று ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் முக்கியப் பணியாகும். நாட்டு வைத்யத்தின் சரித்திரம் போன்ற இன்று சற்றும் தேவையில்லாத விஷயங்களில் ஆராய்ச்சி செய்வதற்காக எடுத்துக் கொள்ளும் பண விரயமோ கால விரயமோ மிகவும் வருந்தத் தக்கது.

இவ்வழியிலே செல்ல நம் வைத்யர்களுக்கு வசதியளிக்கப் பட்டால், நாட்டிற்கே பெருமை தரும் வகையில் இவ்விலாகா வேலை செய்து மக்களின் சுகாதாரப் பணியிலும் இணையற்ற சேவை செய்யும். இவ்விஷயமாக அரசாங்கத்தின் நன்னம்பிக்கையையும் திடமான செயலாற்றத்தையும் நாம் பெரிதும் எதிர் பார்க்கிறோம்,

இதைத் தான் திருச்சி விசேஷ மகாநாட்டின் தீர்மானங்களிலும் கனம் சுகாதார மந்திரியாரிடம் நேரிடையாக ஸமர்ப்பித்த விண்ணப்பத்திலும் எடுத்து விளக்கியுள்ளோம்.

## அ. பா. ஆயுர்வேத மஹாநாடு.

அகில பாரத ஆயுர்வேத மஹாஸம்மேளன வித்யாபீடங்களின் மகாநாடு, 1959 ஜனவரி நடுவில் டெல்லியில் நடைபெறும் எனவும், ஜனாதிபதி ராஜேந்திரபிரஸாத் அவர்கள் இம் மகாநாட்டை ஆரம்பித்து வைக்க இசைந்துள்ளார்கள் எனவும் டெல்லியிலுள்ள வரவேற்புக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

### ஸ்ரீரங்கம் லக்ஷ்மீ ப்ரஸந்ந ஸ்ரீ வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

நவம்பர் மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 599 | 1588 |
| பெண்கள் | 517 | |
| சிறுவர் | 472 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வேகேட்,
ராயபாளையம் எஸ்டேட்.

# திருச்சியில் நடந்த தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் விசேஷ ஸம்மேளனம்.

வைத்ய சந்திரிகையில் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தபடி தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் விசேஷ ஸம்மேளனம் திருச்சி ஆண்டார்தெரு வைத்யஸ்ரீ V. R. ஸுப்ரமண்ய அய்யர் அவர்களின் பாரத்வாஜ ஆயுர்வேத சாலையில் மஹா மண்டலத்தலைவர் ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M அவர்கள் தலைமையில் 19—11—58 புதன் மாலையில் நடைபெற்றது. மகாநாட்டிற்கு சென்னை, தஞ்சை, திருச்சி சேலம், கோவை ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். பிற்பகல் 2 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகியது.

மஹாமண்டலக் காரியதர்சி ஸ்ரீ. T. S. ஈச்வரய்யர், L. I. M. அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றார். வைத்ய சந்திரிகை பிரசுரதாரரும், திருச்சி ஜில்லா ஆயுர்வேத ஸபைத்தலைவருமான ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சியில் விசேஷ அவஸர மகாநாடு கூட்ட வேண்டிய அவசியத்தைப் பற்றி விளக்கிச் சொன்னார். பிறகு மஹாமண்டலத்தின் பொக்கிஷதாரர் ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ ஆயுர்வேதாசார்ய அவர்கள் தாம் சென்னை சென்று கனம் சுகாதாரமந்திரி இணைப்புக்கல்லூரித் தலைவர், மற்றுமுள்ள வைத்யப்பிரமுகர்கள் இவர்களை நேரில் சந்தித்து தற்போதுள்ள சூழ்நிலையைப்பற்றி விவாதித்துப் பேசித் தாம் கண்டறிந்த நிலையை விளக்கமாய் விவரித்தார்.

**ஸ்ரீ நடராஜ சாஸ்திரீ அவர்களின் விரிவுரை:—**

பிரபல தேசீய வைத்யர்கள் இந்திய வைத்ய ஸ்கூலின் ஆரம்ப நிலையிலேயே அதில் அலோபதிகர்களின் ஆதிக்கத்தால் வரவிருந்த கெடுதியை முன்னுணர்ந்து அதைத்தவிர்க்கப் பெரிதும் பாடுபட்டனர். ஆனால் அன்றைய அரசாங்கம் அதை மதிக்கவில்லை. கேப்டன் G ஸ்ரீனிவாஸமூர்த்தி அவர்கள் நிர்வாஹ காலத்திலேயே காலஞ்சென்ற மந்திரி T. S. S. ராஜன் அவர்களது விபரீதப் போக்கால் இந்திய வைத்ய ஸ்கூல் ஸ்தாபித்ததின் நோக்கம் புறக்கணிக்கப்பட்டு விட்டது. கிரமமாக ராஜன்

ஷெட்டி இவர்களது துவேஷப் போக்கால் இன்று அது அலோபதிக் கல்லூரியாக மாறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு அந்தக் கலாசாலையில் தலைவர்களாக இருந்த அலோபதி அதிகாரிகள் வழிவகுத்தனர். ஆக அலோபதி அதிகாரி — மந்திரி வர்க்கத்தின் சூழ்ச்சியே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. இன்றைய நிலையைப் பார்க்கும் போது கேப்டன் ஸ்ரீனிவாஸமூர்த்தி அவர்களின் நிர்வாஹத்தை நாம் பெரிதும் போற்ற வேண்டி வருகிறது. ஆனாலும் தனிப்பட்ட ஒரு நபரின் நல்லெண்ணத்தையோ துரெண்ணத்தையோ நம்பி ஒரு ஸ்தாபனம் அல்லது விக்ஞானம் செயலாற்றப்பட வேண்டுமென்ற நிலை சரியல்ல. அதனால் இனியும் அலோபதி நிர்வாஹிகள் கலாசாலையை நிர்வஹிப்பதோ, இதுசம்பந்தப்பட்ட இலாகாவை நிர்வஹிப்பதோ, நாட்டுவைத்ய முறைகளின் நாசத்திற்குத்தான் காரணமாகும். இதை மாற்றவேண்டும்.

இத்துடன் தற்போதுள்ள கலாசாலை சுத்தமான அலோபதிக்கல்லூரியாக மாற்ற வசதியாகுமாறு அதில் பெரும்பாலான சஸ்திர யந்திர சாதனங்கள் அமைந்துள்ளது. ஸ்டான்லி கலாசாலையைவிட இதில் அதிக வஸதி உள்ளது. அதனால் இதை அலோபதிக்கல்லூரியாக மாற்றவே சென்னையிலுள்ள அலோபதி நிர்வாஹிகள் முற்பட்டு வருகின்றனர். இவ்விதம் சூழ்நிலையை ஏற்படுத்தியது, சிலகாலமாக கலாசாலையின் தலைவர்களாக இருந்து வந்த அலோபதியினர் தீர்க்க திருஷ்டியுடன் செய்த செயலாகும். ஆக நாட்டு வைத்யங்களைப் பிரித்து விடுவதென்ற சர்க்காரின் போக்கு இக்கலாசாலையை ஒரு அலோபதிக் கல்லூரியாக மாற்றி நாட்டு வைத்யக் கல்லூரிக்கு வேறு எங்காவது ஒரு சிறிய இடம் அமைத்துக் கொடுக்கலாம் என்ற நிலையில் மாறவிருக்கிறது. இதற்கும் அங்குள்ள அலோபதிகர்கள் ஆவன செய்து வருகிறார்கள்.

சென்னையிலுள்ள இந்திய வைத்யக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்களும் இந்நிலையை உணர்ந்து மறுபடியும். L. I. M., A. L. I. M. போன்ற கல்வி முறைக்கு இடம் ஏற்படும்படி எப்படியாவது செய்ய வேண்டுமென்ற கருத்திலுள்ளனர். அவர்களது அபிப்ராயம் பின் வருமாறு:— இந்திய வைத்யமுறைகளுக்கு முக்யமான ஸ்தானமும், தேவை பூர்த்திக்குத் தேவையான கால அளவை வரையறுத்து அலோபதியினரின் உதவியைப் பெருவதும் லக்ஷ்யமாகக் கொண்டு பழையபடி கேப்டன் ஸ்ரீனிவாஸமூர்த்தி அவர்களின் வழியிலேயே இக்கலாசாலையைத் திருத்தி



யமைத்தால் நன்மை பயக்கும். நடுவில் வந்த சில அலோபதி நிர்வாஹிகளின் வழிதவறிய செய்கையால் தான் இந்நிலை ஏற்பட்டதே தவிர வழிமேலுள்ள தவறால் அல்ல. கேப்டன் ஸ்ரீனிவாஸமூர்த்தி அவர்களின் காலத்தில் அவரது ஆரம்ப லக்ஷ்யத்திற்கேற்ப நல்ல லக்ஷ்ய வைத்யர்களை ஸ்ருஷ்டிக்க முடிந்தும், பிறகு கிரமமாக அரசினரின் குறுக்கீட்டாலும், சமூக அந்தஸ்து வழங்க அரசாங்கம் மறுத்ததாலும் இந்திய வைத்யம் புறக்கணிக்கப்பட்டு விட்டது. அதனால் மறுபடியும் கேப்டன் ஸ்ரீனிவாஸமூர்த்தி அவர்களின் வழியிலேயே இக்கலாசாலையை திருத்தி யமைத்து, இந்திய வைத்ய இலாகாவை இந்திய வைத்யர்களிடமே ஒப்படைத்து, அலோபதிகர்களின் அதிகாரத்தை எடுத்துவிட்டால் நிலைமை திருந்தும். இவ்வாறு L. I. M. தலைவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். அவர்களது அபிப்பிராயத்தில் L. I. M. கல்வி முறையில் தவறில்லை. நிர்வஹிக்கவந்த அலோபதியினரின் தவறுதான் இந்த நிலைக்குக் காரணம்.

ஆனால் L. I. M. முறையை மறுபடியும் கொணர்வதைப்பற்றி நாட்டு வைத்யர்கள் கவலைப்படுகின்றனர். மறுபடியும் அலோபதிகர்களிடம் நிர்வாஹம் செல்லாமலிருக்குமா என்பதும் மறுபடியும் இதே நிலை ஏற்படாமலிருக்குமா என்பதும் அவர்களது கவலைக்குக்காரணம். முன் செய்த ஒரு விஷபரீக்ஷையில் 35 ஆண்டுகள் கடந்து விட்டன. மறுபடியும் இதே விஷபரீக்ஷை தேவையா? அதனால் ஆயுர்வேதத்தையும் சித்தத்தையும் மட்டும் போதிக்கும் கலாசாலை இருந்தால் மறுபடியும் அலோபதிகர்களை உள் நுழைய விடாமலிருக்கலாம் என்றும் அவர்கள் சிந்திக்கின்றனர்.

இது தான் இன்றைய சூழ்நிலை. பிரதிநிதிகள் இதைக் கவனித்து ஒருமுகமான யோசனையைத் தெரிவிக்கக் கோருகிறேன். இவ்விதம் ஸ்ரீ நடராஜ சாஸ்திரி அவர்கள் பேசிய பிறகு மஹாமண்டலத்தலைவர் ஸ்ரீ A. ராகவராவ் அவர்கள் தமது தலைமையுரையை நிகழ்த்தினார்கள்.

## ஸ்ரீ ராகவராவ் அவர்களின் தலைமையுரை:—

இன்று ஆயுர்வேதத்தின் முன்னுள்ள மிகவும் முக்யமான ஒரு பிரச்னையைப் பற்றி சிந்திக்கக் கூடியுள்ளோம். நாம் ஒற்றுமையுடன் சிந்தித்துச் சரியான வழியில் செயலாற்றாவிடில் வரும் பத்தாண்டுகளுக்குள் நம்முறைகள் அழிந்துவிடக்கூடும்.

நமது சந்ததியினர் சரித்திர வாயிலாகத்தான் இதை அறிய முடியும்.

ஆயுர்வேதம் தான் மிகப் புராதன மருத்துவ விக்ஞானம். உலகின் வேறு பாகத்திலுள்ள வைத்ய முறைகள் அனைத்தும் இதிலிருந்து உண்டானவை. அலோபதி இன்று உலகில் மிகப் பிரசித்தி அடைந்துள்ளது. அது ஆங்கிலமொழி மூலம் உலகம் முழுதும் பரவ வாய்ப்பு பெற்றுள்ளது. நமது முறைகள் ஓரளவு மிகக் குறுகிய அளவில் வழங்கும் பாஷைகளில் உள்ளவையானதால் உலகெங்கும் வியாபிக்க முடியாமலுள்ளது. அதனால் ஆங்கிலம் போன்ற உலகபாஷைகளில் இதைப்பரப்புவது இன்று அவசியமாகிறது. நமது மூலக்ரந்தங்களை எழுதிய மஹரிஷிகள் போன்ற மகான்கள் தாம் இன்று அப்பணியாற்ற முடியும்.

பலவித தடைகள், மற்றும் வேறுவகையில் ஈடுபாடுள்ளவர்களின் குறுக்கீடு, அரசாங்கம் ஆதரிக்காதிருப்பது போன்ற பல்வேறு காரணங்களால் நம் முறைகள் முன்னேறவில்லை. இனியும் அரசாங்கத்தை எதிர்பார்த்து நாம் செயலாற்றாமலிருப்பது சரியல்ல. நம்மக்களின் தேசிய அரசாங்கம் நடைபெறுவதால் மற்றமுறைகளைவிட நம்முறைகளிலுள்ள குணத்தை வெளியிட்டு இதன் வளர்ச்சியில் அரசாங்கம் ஈடுபட வழிசெய்ய வேண்டும். அலோபதி இலாகா சர்க்காரின் ஆதரவை சுதந்திரத்திற்குமுன்னிருந்து பெற்றிருப்பதால் ஆயுர்வேத இலாகாவையும் அவர்களே இன்று நிர்வஹிக்கும் வாய்ப்பைப் பெற்றுவிட்டனர். சர்க்காரிடம் இந்திய வைத்ய முறை நிபுணர்களே இம்முறைகளை வளர்க்க முடியும் என்பதை வற்புறுத்த வேண்டும். ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்வங்களையறியாத அலோபதி வைத்யர் எவ்விதம் ஆயுர்வேத இலாகாவை நிர்வஹிக்க முடியும். சர்க்காரின் எண்ணத்தில் நாட்டு வைத்ய முறைகளை வளர்க்கும் உறுதியிருந்தால் முதல்படியாக ஆயுர்வேத இலாகாவின் நிர்வாஹத்தை ஒரு ஆயுர்வேத வைத்யரிடமே ஒப்படைக்க வேண்டும். ஆங்காங்கு ஜில்லாத்தலைமை ஆஸ்பத்திரிகளில் ஆயுர்வேதமுறையில் சிகித்ஸை பெற வசதியுள்ள வார்டுகள் அளிக்கப்பட வேண்டும். இதனால் மக்களுக்கு இம்முறையில் வைத்ய வசதி அளிப்பதுடன், அரசாங்கத்திற்கும் இம்முறையினால் ஏற்படும் விசேஷ பயனை நிரூபிக்க முடியும். மேலும் தென்னாட்டில் தமிழ்நாட்டிலும் மலையாளத்திலும் பிரசித்தமான வைத்ய முறையைப்பற்றி ஆராய ஒரு கழகம் தென்னாட்டிலேயே நிறுவப்படவேண்டும். அதில் இந்நாட்டிலுள்ள பிரசித்த வைத்யர்களே இடம் பெறவேண்டும். இதன் மூலம் அரசாங்கத்திற்



கும் மக்களுக்கும் நாட்டு முறைகளின் முக்கியத்தை நிரூபிக்க முடியும்.

மற்றுமொரு முக்ய விஷயம் கவனிக்கத் தகுந்தது. அது தான் சரியான வழியில் அமைந்த போதனாமுறை. பல முக்ய ஆயுர்வேத வித்வான்களின் ஏகோபித்த கருத்தில், ஆயுர்வேதம் கற்க வரும் மாணவன் முதலில் ஆயுர்வேதத்தை எல்லா மூல க்ரந்தங்களின் உதவியுடன் எல்லா அங்கங்களிலும் கற்க வேண்டும். இந்த அடிப்படைக்கல்வி கற்றபின் அவனுக்குத் தேவையானால் அலோபதி போன்ற இதர வைத்ய முறைகள் போதிக்கப்படலாம். இவ்விரண்டையும் ஒரே சமயத்தில் ஆரம்பத்திலிருந்தே கற்பிப்பது கேடு விளைவிக்கலாம்.

மற்றுமொரு முக்யபிரச்னை. இருமுறை இணைப்பைப் பிரிக்க வேண்டுமென்று நமது கிளர்ச்சியின் பயனாக இணைப்பைப் பிரிக்க முற்படும் சர்க்கார் தற்சமயமுள்ள இணைப்பு வைத்ய முறைக் கல்லூரியை அலோபதி முறைக் கல்லூரியாக மாற்றிவிட்டு, மிகக் குறைந்த வசதியுடன் நாட்டுமுறைக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க முற்படலாம். இதுவும் தவிர்க்கப்படவேண்டும். இந்த முப்பதாண்டுகளுக்கு முன் நாட்டுவைத்யர்களின் கிளர்ச்சியின்பயனாக காலஞ்சென்ற பனகல் ராஜாவால் இந்திய வைத்ய முறைகளின் முன்னேற்றத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 30 ஆண்டு காலத்தில் அக்கலாசாலையின் நடப்பு முறையினால் இந்திய வைத்ய முறைகளின் வளர்ச்சியில் ஒருவித முன்னேற்றமும் காணவில்லை. அதனால் இந்நடப்பு முறையை மாற்றி அதன் நிர்வாஹத்தைத் தேர்ந்த இந்திய வைத்யமுறை நிபுணர்களிடமே ஒப்படைப்பது இன்று அவசிய காரியமாகும். இதைச் செய்வதைத்தவிர அக்கலாசாலையில் வேறு மாறுதலும் செய்யக்கூடாது. அவ்விதம் நிர்வாஹம் வைத்யர்கள் கைக்கு மாறி கல்வி முறையும் மாறிய பின்னரும் வரும் 25 ஆண்டுக்குள் அதில் ஒருவித முன்னேற்றத்தையும் காணாவிடில் அதை அரசாங்கம் வேறு முறைக் கல்லூரியாக்கலாம். அதனால் இன்று அக்கல்லூரியை, அது பெற்றிருக்கும் முழுச்சாதனங்களுடனும் வசதிகளுடனும் மான்யத்துடனும் நாட்டு வைத்யர்களின் நிர்வாஹத்தில் ஒப்படைக்க வேண்டும். அலோபதியினரின் குறுக்கீடு எவ்வகையிலும் இவ்விலாகாவில் இருக்கக் கூடாது. இந்த அமைப்பில் உருவாகும் கல்லூரி நிச்சயமாக மிக விரைவிலேயே நல்ல பணியாற்றும் என்பதில் சந்தேகமில்லை.

இதில் முக்யமான சில நிர்வாஹ ஸௌகர்யங்கள் தேவை. அவையாவன:—

1. இந்திய வைத்ய இலாகாவை இந்திய வைத்தியர்களிடமே ஒப்படைத்தல்.
2. இணைப்புமுறைக் கல்லூரியை அதன் முழுவசதியுடன் இந்திய வைத்தியக் கல்லூரியாக மாற்றுதல்.
3. சென்னை ஸர்வகலாசாலையின் B. I M. கல்வி திட்டத்திற்கு ஏற்ற பாடபோதனை வகுத்தல்.
4. ஜில்லா - நகர — ஆஸ்பத்திரிகளில் இந்திய வைத்யமுறை வார்டுகள் ஏற்படுத்துதல்.
5. ஸித்தவைத்யமுறையிலும் மலையாள வைத்யமுறையிலும் ஆராய வசதியுள்ள ஆராய்ச்சிக்கழகத்தை தென்னிந்தியாவில் நடத்துதல்.
6. நல்ல ஓஷதிவனம் ஏற்படுத்தி ஓஷதிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும் சிறந்த ஔஷதங்களைத் தயார் செய்யவும் வசதி செய்தல்.
7. நாட்டில் ஸ்தாபிக்கவிருக்கும் நாட்டு வைத்ய சாலைகளுக்குத் தேவையானவைகளைத் தயாரிக்க ஆங்காங்கு மருந்து உற்பத்திசாலைகள் நிறுவுதல்.

இவையெல்லாம் நாட்டுவைத்யமுறைகளின் பிரசாரத்தில் அதிகமாக உதவும். இவைகளை முழுவதும் ஆழ்ந்து ஆலோசித்துத் திட்டம் வகுத்து நாமே செயற்பட வேண்டும் என்பதே என் கோரிக்கை.

தலைமையுரைக்குப் பின்னர் மஹாமண்டலத்தின் விசேஷ அழைப்பிற் கிணங்கி மஹாநாட்டில் கலந்து கொண்ட சென்னை இந்தியக் கல்லூரியின் முன்னாள் பேராசிரியரும் சென்னையில் பல பத்திரிகைகள் மூலம் ஆயுர்வேத சேவை செய்து வருபவருமான ஸ்ரீ M. V. வெங்கடராகவன் H. P. I. M. அவர்கள் இதுபற்றித் தமது கருத்தை வெளியிட்டார்கள்.

**ஸ்ரீ வேங்கடராகவன் அவர்களின் கருத்துரை:—**

மந்திரி அவர்கள் இந்திய மருத்துவம் தனித்துக் கற்பித்தால் தான் வளருமென்று பொதுப்படையாகச் சொன்னதை



அரசாங்கத்தின் திடமான கொள்கை என நினைப்பதற்கில்லை. ஆயுர்வேதம் அதன் சல்ய சாலாக்ய அங்கங்களின் நிறைவிற்கு அவ்வளவில் அலோபதியின் இணைப்பை நாடவேண்டியிருக்கிறது. அவ்வங்கங்களின் நிறைவு ஏற்படாவிடில் ஆயுர்வேதம் துர்பலமாக இருக்கும். மருத்துவ சட்ட சம்பந்தப்பட்ட ரீதியில் ஏற்கவேண்டிய எல்லா வேலைகளிலும் இன்றுள்ள ஆயுர்வேதத்தைத் தனித்துக் கற்றவன் தகுதி பெறமாட்டான். சல்ய-பிரஸூதி சிகித்ஸை விஷயங்களில் மற்றொரு அலோபதி சஸ்திர சிகித்ஸா நிபுணனின் உதவி ஒரு ஆஸ்பத்திரியில் வேலைசெய்ய நியமிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்யனுக்கு அங்கு தேவையாகலாம். துர்பலமான நிலையிலேயே ஆயுர்வேதம் வாழ்வதில் எனக்கு உற்சாகமில்லை. அது பூர்ணநிலை பெற்று நல்ல பலத்துடன் திடத்துடன் பொலிவுடன் வாழ்வதற்காகவே பணியாற்ற விரும்புகிறேன்.

அலோபதிகர்களைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆயுர்வேதத்தைப் பற்றி அறியாததால் அவர்கள் அவ்விதம் பேசுகிறார்கள். ஆயுர்வேதத்தை அவர்கள் அறியும் வகையில் நாம் அதைப் புகட்டவில்லை. அந்நிலையில் அவர்கள் தாமறிந்ததே உண்மை என நினைக்கவும் கூறவும் முற்படுவதில் ஆச்சரியமில்லை. அதனால் அவர்கள் அறியும் வகையில், சுலபமாக அடையும் வகையில் அவர்கள்து வழியிலேயே நாம் ஆயுர்வேதத்தை உருவகப்படுத்தி அவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டும். பல அலோபதிகர்கள் ஆயுர்வேதத்தைக் கற்று ஆயுர்வேத முறைப்படி வைத்யர்களாகியுள்ளனர் பலர் அடையார் கோவாபரேடிவ் ஸ்டோரின் அங்கத்தினராகியுள்ளனர். மற்றவர்களும் இவர்களைப் பின் பற்றுவர் என்பதில் சந்தேகமில்லை. இதற்கெல்லாம் நான் கூறும் தேவையம்சங்களின் இணைப்பு உதவும்.

ஆயுர்வேதத்திடம் அரசினர் ஆதரவு குறைவதால் மக்களின் ஆதரவும் குறையும் என நினைப்பதும் தவறு. இந்திய மக்கள் அதிலும் தமிழ்பேசும் மக்களின் ஆதரவையும் உற்சாகத்தையும் பன் மடங்கு பெருக்குவதில் என் போன்ற தனிப்பட்ட வைத்யனின் பணிகூட மிகப்பெருமளவில் பயனளித்து வருகின்றதென்பதை திடமாகக் கூறமுடியும்.

இணைப்பு பற்றி எனது கருத்துக்களை 'குருக்ஷேத்ர' என்ற சமுதாயநலதிட்டப் பத்திரிகையிலும், மத்ய சுகாதார இலாகாவின் உண்மை அறியும் (Fact Finding) குழுவிடம் நான் சமர்ப்

பித்த அறிக்கையிலும் வெளியிட்டுள்ளேன். அதில் சம்பந்தப்பட்ட அம்சத்தை மாத்திரம் இங்கு கூறுகிறேன்.

ஸமுத்ரம் தன்னுடன் சேரும் பலதரப்பட்ட நதிகளின் நீரைத் தனதாக்கிக் கொண்டு தன்னிலையிலும் மாறுதிருப்பது போல, ஆயுர்வேதம் அலோபதியிலிருந்து சல்ய சாலாக்ய அங்கங்களை ஏற்றுக்கொண்டாலும் ஆயுர்வேதமாகவே திகழும். இவ்விணைப்பால் தனிப்பட்ட தேசிய வைத்ய முறை ஒன்று உருவாகும். அதில் பழமையும் புதுமையும் அதனதன் உயர்ந்த அம்சங்களுடன் ஒன்று கூடும். இதைக்கிரியாம்சையில் கொணர்வது ஒரு வைத்யமுறையைப் படித்தவன் மற்றொருமுறையின் அவசிய அடிப்படையறிவைப் பெறும்படி அரசாங்கம் வற்புறுத்துவதால் ஸாத்யமாகும்,

ஆயுர்வேதத்துடன் நவீன வைத்ய முறையை ஸ்ருஷ்டிப்பதே வைத்ய உலகில் ஏற்பட்டுள்ள ஜாதிவேற்றுமையை ஒழிக்கும். தேசத்தின் சுகாதாரப் பணியில் முக்கியமாக கிராமசுகாதாரத்திற்குப் பெரிதும் உதவும்.

இணைப்பு எவ்விதம் செய்யப்படவேண்டும்? ஆயுர்வேதத்தில் தேவையான அம்சத்தை தேவையான அளவில் சேர்க்க வேண்டும் என்பதே. ரஸத்திற்கு எவ்வளவு உப்பு தேவை என்பதைத்தான் கவனிக்கவேண்டுமே தவிர உப்பிற்கு எவ்வளவு ரஸம் தேவை என்று கணக்கிடக்கூடாது. இதை விவரமாகக் கூறப்புகின் பின்வருமாறு:—

1. ஆயுர்வேதத்தைக் கற்க வரும் மாணவன் ஆயுர்வேதத்தின் எல்லா பகுதிகளையும் அலோபதி முறையின் அடிப்படைத் தத்வத்தையும் சல்யசாலாக்யப் பகுதியையும் படிக்க வேண்டும். அம்மாதிரி அலோபதி மாணவன் அலோபதியின் எல்லா அம்சத்தையும் படிப்பதுடன் ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் சிகித்ஸைவழிகளையும் படிக்க வேண்டும். இவ்வகைப் படிப்பு முறை L. I. M, மூலம் இந்திய வைத்யத்திலும் F. I. M, A. I. M மூலம் அலோபதியிலும் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அதனால் கிராம வைத்யசாலைகளில் நியமிக்கப்பட்ட L. I. M வைத்யர்கள் சல்ய சாலாக்ய முறைகளில் தவிர மற்றவைகளில் இந்திய வைத்ய முறைப்படியும் சல்ய சாலாக்ய பிரஸூதி சிகித்ஸைகளை அலோபதி முறைப்படியும் செய்து வந்தனர். அக்காலத்தில் இந்திய வைத்யக் கல்லூரியில் ஆசிரியராக வந்த அலோபதி டாக்டர்களும் F. I. M. A. I. M, பரீக்ஷைகளில் தேர்ந்தவர்களாக



இருந்தனர். அவர்களுக்கு உதவியாளர் அனைவரும் L. I. Mகளே. அதனால் இவ்விணைப்பு பலன் தருவதாகத் தானிருந்தது.

2. நமது திட்ட அதிகாரிகளுக்கும் கொள்கைகளை வகுப்பவர்களுக்கும் இந்திய மருத்துவ முறைகளில் உண்மையான ஆதரவு உண்டு (!!) இந்தியாவின் பிராசீன வைத்யமுறைகளையும் அலோபதிமுறையையும் இணைத்து இரண்டறக் கலந்த ஒரு தேசிய வைத்ய முறையை உருவாக்குவதே அரசாங்கத்தின் லக்ஷ்யம் என்பதை ஸ்பஷ்டமாக உலகிற்குத் தெரிவிக்கவேண்டும்.

3. இந்த லக்ஷ்யம் நிறைவேற, ஏதாவதொரு வேறு வைத்ய நிபுணரே அரசாங்கத்தின் மூலம் நியமனம் பெறுவார். என்ற கட்டுப்பாடு இருக்கவேண்டும் அதாவது நவீன வைத்யமுறைகளில் தேறியவர் F. I. M, A I. M., போன்ற பரீக்ஷைகளில் தேறியவராகவும், ஆயுர்வேத சிரோமணி போன்றவர் A. L. I. M. போன்ற பரீக்ஷைகளில் தேறியவராகவும். H. P. I. M. போன்ற பரீக்ஷையில் தேறியவராகவும் இருக்கவேண்டும்.

4. கம்பவுண்டர்கள் கூட இருமுறைகளின் அடிப்படைகளை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

5. முதலுதவி பாடங்களிலும் நாட்டுமுறைகளின் சிறு சிறு நல்ல முறைகள் இடம் பெறவேண்டும்,

6. நவீன வைத்ய முறைப்படி நடக்கும் எல்லா ஆஸ்பத்திரிகளிலும் ஆயுர்வேத முறைப்படியே சுகம் கிடைக்கத்தக்க நோய்களில் சிகித்ஸை பெற வசதியளிக்கும் வகையில் தனியாக ஆயுர்வேத வைத்யர்கள் சகலவசதிகளுடன் நியமிக்கப்பட வேண்டும்.

இவ்வகையிலே நடுவிலே ஒருவிதத்தடங்கலும் ஸம்சயமுமில்லாமல் திட்டம் வகுத்துச் செயலாற்றினால் இந்தியாவிற்கே பெருமையளிக்கும் வகையில் ஒரு தேசிய வைத்யம் உருவாகும், வைத்யர்களிடையே தோன்றியுள்ள ஜாதி வேற்றுமையும் அகலும்.

**ஸ்ரீ ராமசர்மா அவர்களின் கருத்துரை:—**

இவ்விதம் ஸ்ரீ M. V. வெங்கடராகவன் அவர்கள் பேசியபின் கரூர் வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S ராமசர்மா அவர்கள் கருத்துவேற்றுமையை விளக்கினார். ஒருவன் M. B. B. S. படித்த பிறகு மறுபடியும் ஆயுர்வேதாசார்யாவிற்குப் படிப்பதோ.

அல்லது ஆயுர்வேதாசார்யா தேறிய பிறகு M. B. B. S. படிப்பதோ இரு முறையிலும் தேர்ச்சி பெறுவதற்கு உதவலாம். வைத்யத்தில் சிறிதளவு கற்பது அபாயமானது. வேறுபட்ட அடிப்படைத்தத்வங்களை உள்ள இரு வைத்யங்களில் ஒன்றை முழுதும் படித்துக் கொண்டே மற்றொன்றின் அடிப்படைத் தத்துவத்தையும் சில அம்சங்களையும் கற்பது ஞானஸம்சயத்திற்கு இடமாகும். ஞான ஸம்சயத்தைப் போன்று கேடு விளைவிப்பது வேறு இல்லை. இங்கிலேயில் இணைப்புமுறையைக் கற்ற ஒருவன் ஒரு முறையிலும் பூர்ணத்தேர்ச்சி பெற முடிவதில்லை. வைத்யர்களிடையே ஜாதி வேற்றுமையைப் போக்க வல்லதாகக் கூறப்படும் இவ்விணைப்பு வேறு ஒரு புதிய ஜாதியை ஏற்படுத்தும். இதனால் மேலும் ஜாதி வேற்றுமை வளரும். அதனால் ஆயுர்வேதத்தை மாத்திரம் தனித்துப் போதிக்கும் கல்லூரிதான இன்று அவசியமானது. கடந்த முப்பதாண்டு அனுபவத்தில் இணைப்பால் நல்லதொன்றும் ஏற்படவில்லை. இக்கல்லூரியில் அலோபதியினரின் சலுகையால் ஆயுர்வேத வைத்ய ஆசிரியர்களிடத்தில் மாணவர்களுக்கு மதிப்பில்லாது போய்விட்டது. பிறகு ஆயுர்வேதத்திடமே மாணவர்கள் மதிப்பிழந்து விட்டனர். அதனால் இணைப்பை மேலும் பரீக்ஷிக்க முற்படுவது விஷபரீக்ஷையாக முடியும். அதனால் இணைப்பிற்கு இடமளிக்கக்கூடாதென்று ஸ்ரீ ராமசர்மா அவர்கள் வற்புறுத்திக் கூறினர்.

இதன் பிறகு கோவை சித்த வைத்ய சங்கத்தின் தலைவரும் பிரபல சித்த வைத்யருமான வைத்ய வித்வன்மணி ஸ்ரீ C. K. குமாரஸாமிபிள்ளை அவர்கள் தமது கருத்தை வெளியிட்டார்கள்.

## ஸ்ரீ குமாரஸாமி பிள்ளை அவர்களின் கருத்துரை:—

நாட்டு வைத்ய முறைகளின் வளர்ச்சியில் அரசாங்கத்தைப் பெரிதும் நம்புவதில் பிரயோசனமில்லை. நல்ல தனவந்தர்களும் தானசீலர்களும் நம்மிடையே பலர் உள்ளனர். அவர்களது உதவி கொண்டு நாமே ஆங்காங்கு கலாசாலைகளும் ஆஸ்பத்திரிகளும் நடத்தி அதன் மூலம் நமது வைத்யமுறைகளைச் சுலபமாக வளர்க்க முடியும். இதை என் அனுபவத்தில் காண்கிறேன். சித்தவைத்ய வித்யாசாலை ஒன்றை தனவந்தர்களின் உதவியால் நடத்தி சென்னை ஸர்வகலாசாலையின் ஸித்த B. I. M. பரீக்ஷைக்கு அனுப்பமுயன்று வருகிறேன். நமது முறைகளில் ஸர்ஜரியின் கைப்பழக்கத்தால் ஏற்படும் திறமை இன்று மறைந்து விட்டதால்



அத்திறமையைப்பெற அலோபதியினரின் உதவியை ஒரு குறிப்பிட்ட காலவரைக்குப்பெற்று ஸர்ஜரியின் பூர்வகர்ம • பின் கருமங்களில் நமது முறையையே கையாண்டு சில வருஷங்களுக்குள் நம் வைத்யர்களைக்கொண்டே சல்ய சாலாக்யங்களையும் போதிக்க வகை செய்து விடலாம் என என் நம்பிக்கை. இதையும் செயலாக்க முற்பட்டு வருகிறேன். சித்தமும் ஆயுர்வேதமும் ஒன்றே. ஆனால் அரசியல் வழியில் இன்று அவை பிரிந்துள்ளன. காலக்ரமத்தில் இவ்விரண்டையும் ஒன்றாக்குவதும் நமது கடமையே. இதுதான் கல்வி முறையில் எனது கருத்து.

அவருக்குப்பின் பேசிய ஆட்டையாம்பட்டி ஸ்ரீ K. A. நடேசன் அவர்கள் நாட்டு வைத்யம் எனக் கூறுவது வழக்கில் நம்மை சற்றுத்தாழ்த்தக் கூடியதாக இருப்பதால் தேசீய (National) வைத்யம் என்று கூறிக்கொள்வது நல்லதென்றும், சித்த ஆயுர்வேதபேதங்கள் இனித்தேவையில்லை என்றும் வற்புறுத்தினர்.

பிறகு ஸ்ரீ R. K. பழனியப்பா (சேலம்) ஸ்ரீ ராஜு (கரூர்) மற்றும்பலர் தம்து கருத்துக்களைக்கூறினர். இக்கருத்துக்களை ஆதாரமாகக்கொண்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. இவை தனியே பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கனம் சுகாதாரமந்திரி மாணிக்கவேலரிடம் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட மஹஜரின் நகல் ஒன்று ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரியால் ஸபையில் வாசிக்கப்பட்டது. மந்திரியாரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அம்மஹஜரும் தனியே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. சபையோரின் அங்கீகாரம் பெற்ற அந்த மஹஜரை மந்திரியாரிடம் சமர்ப்பித்து நமது திட்டங்களை நிறைவேற்ற ஆவன செய்ய ஒரு உப கமிட்டியைக் கூட்டம் நியமித்தது.

ஸ்ரீ எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்த்ரி மஹாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளுக்கு வந்தனோபசாரம் அளித்தார். தந்வந்தரி பிரார்த்தனையுடன் மகாநாடு இனிது முடிவடைந்தது.

இம் மகா நாட்டைச் சிறப்பாக நடத்திக் கொடுத்த வைத்ய அன்பர்கள் அனைவருக்கும் நமது நன்றி உரித்தாகுக.

## தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம் சேலம் ஜில்லா கிளை
## சித்த ஆயுர்வேத யூநானி வைத்யர்களின் ஜில்லா
## விசேஷ மகாநாடு

*14-12-58* ஞாயிற்றுக் கிழமை காலை *11* மணிக்கு சேலத்திலிருந்து மேற்கில் *8* மைல் தூரத்திலுள்ள கஞ்சமலை அடிவாரம் சித்தர் கோவிலில் நடைபெறும்.

ஸமீபத்தில் சென்னையில் நடந்த *13*-வது இராஜ்ய டாக்டர்கள் மகாநாட்டில் இந்திய வைத்யக் கல்லூரியை நவீன வைத்யக் கல்லூரியாக மாற்றும்படி அவர்கள் கோரியுள்ள யோசனையைக் கண்டிக்கும் நோக்கத்துடனும், நாட்டு வைத்ய அபிவிருத்திக்கான வழிகளைக் கலந்தாலோசிக்கவும், உறங்கிக் கிடக்கும் நாட்டு வைத்ய சமூகத்தைத் தட்டி யெழுப்பி ஊக்குவிக்கவே இம்மகாநாடும் பதினெண் சித்தர்களில் ஒருவராகிய கஞ்சமலைச் சித்தர் சமாதி யடைந்த கஞ்சமலை யென்னும் சிறந்த ஊரில் மூலிகை ஆராய்ச்சியும், மாதாந்திர பாட வகுப்பும் (Refresher Course) நடைபெறும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன், மகாநாட்டில் தலைமை மண்டலத் தலைவர் பிஷக்வர ஸ்ரீ A. ராகவ ராவ் A. L. I. M., பொதுக் கார்யதர்சி டாக்டர் T. S. ஈச்வரன் L. I. M., கோவை வைத்ய வித்வம்மணி ஸ்ரீ C. K. குமாரசாமி பிள்ளை, கல்கி ஆனந்தவிகடனில் ஸ்ரீ ஹரி குச்சா மாமா என்ற பெயர்களுடன் நாட்டு வைத்யம் பற்றி எழுதிவரும் சர்க்கார் இந்திய வைத்யக் கல்லூரி ஓய்வு பெற்ற பேராசிரியர் ஸ்ரீ M. V. வெங்கட ராகவன் H. P. I. M., கரூர் கட்டி வைத்ய நிபுணர் பண்டிட் ஸ்ரீ P. S. ராமசர்மா, திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்த்ரிகள், திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் மானேஜிங் டைரெக்டர் ஸ்ரீ S. V. இராதா கிருஷ்ண சாஸ்திரி (வைத்ய விசாரத) ஆகியோர்களும் கலந்து சொற்பொழிவாற்ற ஏற்பாடு நடைபெற்று வருவதால் மஹா மண்டல அங்கத்தினர்களும் ஜில்லாவிலும், இதர ஜில்லாவிலுள்ள வைத்யர்களும் நாட்டு வைத்ய சங்கங்களும் கலந்து கொண்டு இவ் விசேஷ மகாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

கஞ்சமலை சித்தர் கோவில் சேலம் டவுனுக்கு மேற்கே 8 மைல் தூரத்தில் எளம்பிள்ளை ஜலகண்டபுரம் போகிற வழியில் உள்ளது. வருவதற்கு சித்தர் கோவில் நெ 17. டவுன் பஸ்ஸும், எளம்பிள்ளை, ஜலகண்டபுரம், நங்கவள்ளி - மேட்டூர் போகும் பஸ்ஸுகளும் சௌகரியமாகக் கிடைக்கும்.

இங்ஙனம் தங்கள்

வைத்ய R. K. பழனியப்பா, காரியதரிசி,

வைத்ய A. கோவிந்த நாயர், தலைவர்



## Resolutions passed unanimously at the Special Conference of the Tamilnad Ayurveda Mahamandalam held on 19—11—1958 at Tiruchirapalli.

This Extraordinary Conference of the Tamilnad Ayurveda Mahamandalam is of opinion that:

I. (a) Whereas the College of Integrated Medicine, Madras has failed to live up to the standards set up at the inception to the teaching of Indian Medicine and its alumni seek employment in allopathic medical institutions and practise only allopathy, thereby frustrating the advancement of Indian Medicine, a re-orientation is essential in the curriculum and syllabus of the College;

(b) To achieve that object, the name of the College has to be changed to its original name, namely the College of Indian Medicine, as the present name Integrated Medicine is fallacious as the curriculum of study shows only Separation and co-existence by sufferenco and not integration;

(c) As the implementation of the declared object of the Government namely adequate recognition and encouragement of Indian Medicine is possible, only by those who have adequate knowledge of the subject and who are votaries of those systems and not by persons who are qualified in Allopathic system, however eminent they may be in that system, calls on the Government to hand over the administration and policy making to the practitioners of respective systems of Indian Medicine only.

(d) The present G. C. I. M. Course may be abolished forthwith, as it fosters unhealthy rivalry between one class of practitioners and another. In its place, the B. I. M. degree course of the Madras University with additions or suitable modifications where necessary may be started with an avowed object to teach the systems of Indian Medicine in all its branches and in entirety so as to make the practitioner to practise his system with confidence and

without any divided loyalty. The present College of Integrated Medicine with all its resources now available should be transferred to the proposed College of Indian Medicine. As advancement of medicine is possible only by practice, it is essential that facilities should be made available in number of centres by starting Inpatient hospitals;

(e) In matters of medical education and medical relief, pertaining to the systems of Indian Medicine. as the Government has to be advised by a competent body of the respective medical practitioners, this conference urges the Government to create a separate department of Indian Medicine under the head of a Director, who should be an expert practitioner of Indian Medicine. This Conference also urges the Government to constitute a Board of Advisors drawn from the practitioners of the differents systems to advise the Director on matters pertaining to the respective systems.

II. This Conference decides to exert continuous efforts till the above avowed objects are achieved.

III. This Conference resolves that the further responsibility of drafting a Memorandum based on the aforesaid resolutions and with other necessary details. and submitting the same to the Minister for Public Health, Madras State be entrusted to a Sub Committee consisting of the following members elected unanimously with powers to co-opt.

1. Vaidya Sri A. Raghava Rao, President.
2. ,, ,, V. B. Nataraja Sastri.
3. ,, ,, V. Subrahmanyam.
4. ,, ,, P. S. Rama Sarma.
5. ,, ,, C. K. Kumaraswami Pillai.
6. ,, ,, T. V. Radhakrishna Sastri.



# தமிழ் நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

27, சின்னக்கடைத் தெரு.
திருச்சிராப்பள்ளி-2.

22—11—58 ல் திருச்சியில் சென்னை பொது சுகாதார

## மந்திரி கனம் M. A. மாணிக்கவேலு

அவர்களிடம்

## தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தார் ஸமர்ப்பித்த யாதாஸ்து.

### கடந்த கால வரலாற்றுச் சுருக்கம்.

### முதல் உஸ்மான் கமிட்டி.

G. O. No. Ms. 964 P. H. dated 10—8—1921 G. O. No. 1351 P. H.

இந்த ராஜ்யத்தில் பழக்கத்தில் இருந்துவரும் இந்திய வைத்ய முறையை அங்கீகாரம் செய்து வளப்படுத்துவதற்கான வழி வகைகளைக் குறித்து அறிக்கை அளிப்பதற்காக இக்கமிட்டி நிறுவப்பட்டது. இக்கமிட்டியும் இந்திய வைத்யப் படிப்பில் இந்திய மருந்துகள் ஸம்பந்தமாய் நன்கு கற்பிக்கப்படுவதுடன் மேல்நாட்டு முறைகளில் முக்யமானவைகளையும் கற்பிக்கத் தக்க ஏற்பாடுகளும் செய்ய வேண்டுமென்ற ஒருமுகமான முடிவுக்கு வந்தது.

G. O. No. 1581 Mis. P. H. dated 3—11—1924.

மேற்கண்ட சிபார்சை நடைமுதலில் கொணரும் பொருட்டு இந்திய வைத்யப் பள்ளிக்கூடம் 1924-ஆ நவம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டாலும் 6—1—25 முதல் தான் வேலை செய்ய ஆரம்பித்தது. இவ்விதமாக L. I. M. வகுப்பு (இந்திய வைத்

யத்தில் தகுதிபெற்றவர்) 120 மாணவர்களுடன் ஆரம்பிக்கப் பெற்றது. இப்படிப்பின் பயிற்சிகள் ஆயுர்வேதம், சித்தம்: யூனானிகளிலும் உடற்கூறு, சரீர தத்வம், சஸ்த்ர சிகித்ஸை, மருந்து வகைகள், விதிகள், பிரஸூதி தந்த்ரம் இவைகளில் நவீன முறைகளை முக்யமாகக் கொண்டதாக இருந்தன. பரீக்ஷைகள் அரசாங்க பரீக்ஷாதிகாரிகளின் குழுவால் நடத்தப் பட்டன.

*1929*-ல் இந்திய வைத்யத்தில் நிபுணத்வம் அடைவதற்காக H. P. I. M. என்ற மேற் படிப்பு வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது.

G. O. Ms. 1595 P. H. dated 21—7—1933.

*1933*-ல் நான்கு வருஷப் படிப்பான L. I. M. பயிற்சி ஐந்து வருஷமாக நீடிக்கப்பட்டு கடைசி வருஷத்தில் பரீக்ஷை யில்லாமல் அநுபவப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த L. I. M. பரீக்ஷையில் தேறியவர்கள் அரசாங்க உதவி பெறும் கிராம வைத்யசாலைகளிலும், இந்திய வைத்ய முறையில் நடைபெறும் முனிஸிபாலிடி லோகல் போர்டு ஆஸ்பத்திரிகளிலும் நியமனம் பெறத் தகுதியுள்ளவர்களானார்கள்.

இப்பயிற்சி மூன்றில் இரண்டு பங்கு இந்திய வைத்யத்திலும், ஒரு பங்கு மேனாட்டு முறையிலும் பாடம் கற்பிக்கும்படி அமைக்கப்பட்டது. உடற்கூறு சாஸ்த்ரம் இரண்டு முறைகளுக்கும் பொதுவாகக் கருதப்பட்டது. இந்திய வைத்யத்திலேயே பூராவாக மருந்துகள் தயாரிப்பு அனுபவம் ஏற்படுமாறும், சஸ்த்ர ப்ரயோகம், ப்ரஸூதி தந்த்ரங்களில் மேனாட்டு வைத்ய முறையில் பயிற்சி அடையுமாறும் அமைக்கப்பட்டன.

## இரண்டாவது உஸ்மான் கமிட்டி.

G. O. No. 1988 P. H. dated 13—5—1940.

ஸர் மஹம்மது உஸ்மான் ஸாஹிப் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டி "இந்திய வைத்யப் பள்ளிக்கூடத்திலுள்ள பாடத் திட்டங்கள், கற்பிக்கும் முறை, பரீக்ஷைகள் — இவைகளை அபிவிருத்தி அல்லது திருத்தி அமைத்தல் செய்ய வேண்டுமா என்பதைத் தெரிவிக்க அமைக்கப்பட்டது. இக்கமிட்டியும் தனது யாதாஸ்தை அளித்ததும், அக்காலத்திலுள்ள அட்வைஸர்ஸ் அரசாங்கம் ஒருவித நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ளாமல் பொதுஜன வாக்குரிமை பெற்ற சர்க்காருக்கு முடிவு செய்ய விட்டார்கள்.



## காலேஜ் ஆரம்பிக்கக் கிளர்ச்சி.

இவ்வருஷங்களில் L. I. M. சங்கமும், மற்றவர்களும் இந்தப் பள்ளிக்கூடத்தை காலேஜின் அந்தஸ்துக்கு உயர்த்தினால் இம்மாறுதலால் இங்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பொது மக்களிடையே அதிகமாகத் தொழில் வாய்ப்பு கிடைக்குமெனக் கருதி காலேஜாக மாற்றக் கிளர்ச்சி செய்தனர். *1946*-ல் இந்திய வைத்யத்தை மேலும் அபிவிருத்தி செய்ய வழிவகைகளை ஆராய ஒரு தாத்காலிக கமிட்டி நிறுவப்பட்டது. இக்கமிட்டியின் அறிக்கை அரசாங்கத்தாரால் பரிசீலிக்கப்பட்டு இந்திய வைத்ய முறையை மாற்றியமைத்து மேற் படிப்புக்கு வசதி அளித்து அதன் தரத்தை உயர்த்தி மேனாட்டு வைத்யத்திற்கு ஒப்பாகச் செய்து பொது மக்களிடையே நன்கு பரவச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தது.

G. O. Ms. 2166 P. H. dated 21—7—1946.

இத்தாற்காலிகக் கமிட்டி சிபார்சுகளை அநுஸரித்து பாடத் திட்டங்கள், போதனாமுறை இவைகளை நிர்ணயிக்குமாறு ஒரு கல்விக் குழுவை அரசாங்கம் அமைத்தது. இதன் அங்கத்தினர்கள் ராஜ்யத்தின் பல பாகங்களிலிருந்தும் இந்திய வைத்ய பள்ளிக்கூடத்திலுள்ளவர்களில் அதிக அநுபவம் பெற்றவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாடத் திட்டங்களும் சில மாறுதல்களுடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன.

G. O. No. Ms. 4109 P. H. d/22—12—1947 and G. O. No. Ms. 2329 P. H dated 28—6—49.

## இந்திய வைத்ய காலேஜின் ஆரம்பம்.

188372

G. O. No. Ms. 762 P. H. dated 10—3—1947.

*1947*-ஆம் ஆண்டில் அரசாங்கம், இந்திய வைத்யத்தை மென்மேலும் படிப்பதற்கு வசதி யிருப்பதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் தகுதியாக இருக்கும்படி இந்திய வைத்யப் பள்ளியை காலேஜாக மாற்றியமைக்கத் தீர்மானித்தது.

*1947* ஜூலை முதல் L. I. M. படிப்புக்கு மாணவர்களைப் புதிதாகச் சேர்ப்பதை நிறுத்தி [illegible] இன்டர்மீடியட்

188372

பாஸ் செய்த 50 மாணவர்களுடன் 1947 ஜுலை முதல் காலே ஜாக மாறி நடைபெறத் தொடங்கியது.

G. O. No. Ms. 1777 P. H. dated 28—5—1948.

1948-ல் காலேஜ் வகுப்புடன் L. I. M. வகுப்புகளும் புதுப் பிக்கப்பட்டன. இப்படிப்புக்கு மாணவர்கள் சேர்ப்பதை வருஷத்துக்கு 100 வரை எல்லையாக்கி பயிற்சி காலமும் நான்கு வருஷங்களாக விஸ்தரிக்கப்பட்டது. இப்படிப்புத் திட்டமும் மறுபடியும் 1953-ல் ரத்து செய்யப்பட்டது.

வைத்யப் பயிற்சியின் அதிக வஸதிக்காக 110 படுக்கையாக இருந்ததை 210 ஆக உயர்த்தினர். (1942-க்கு முன் 30 படுக்கை வஸதியுடன் ஆரம்பிக்கப் பெற்று க்ரமமாக 60, 80 என்று உயர்ந்து 1947-ல் 110 ஆக உயர்ந்தது.)

இந்திய வைத்தியத்தில் வைத்யத்தின் அடிப்படைத் தத்வம், பூர்வ ஜ்ஞானம், குண பாடம், ஸ்வஸ்த்த வ்ருத்தம், ரோக நிச்சயம், சிகிச்சை, சல்யம், சாலாக்யம், ப்ரஸூதி தந்த்ரம், ஸ்திரீ ரோகம், அகத தந்த்ரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் பயிற்சி யளிக்கப்பட்டது.

சஸ்த்ர சிகித்ஸை, ப்ரஸூதி தந்த்ரங்கள் போன்ற விஷயங்களைப் போதிக்கும் பொழுது, ஆபரேஷனுக்கு முன்-பின் செய்யும் சிகித்ஸைகள் பற்றி அதிக கவனம் செலுத்தப்பட்டது. சஸ்த்ர சிகித்ஸைப் பகுதி மேனாட்டு முறை மூலமே கற்பிக்கப்பட்டது. இந்திய வைத்ய ஸம்பந்தமான முக்யப் பகுதிகள் எவையும் விடுபடக் கூடாது என்பதே இதன் நோக்கமாகும். இவ்விதப் பகுதிகள் விடுபடுமானால் பயிற்சி பெறும் மாணவன் கால க்ரமத்தில் பழக்கமில்லாமல் பாட விஷயங்களை மறந்து விடலாம். கீழ்ப் படிப்பு கால அடிப்படையான விஷயங்கள் கற்பிக்கப்பட்டு அறிந்து கொள்ளப்படாம லிருந்தால் பிறகு ஆராய்ச்சி நடத்தவும் மேற் படிப்பிற்கும் வஸதி யில்லாமற் போகலாம்.

இந்திய வைத்ய முறையில் L. I. M. வகுப்புக்கான பாடத் திட்டம் அகில இந்திய ஆயுர்வேத வித்யாபீடத்தினரால் ஆயுர்வேத விசாரதாவுக்கு ஸமமாக ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், L. I. M.கள் ஆயுர்வேத ஆசார்யபரீக்ஷைக்கு உரியவர்களாக அநுமதிக்கப்பட்டார்கள். H. P. I. M. படிப்பு வித்யாபீடத்தினரால் ஆயுர்வேத ஆசார்ய பரீக்ஷைக்கு ஸமமாக ஒப்புக்கொள்ளப் பட்டது.



சோப்ரா கமிட்டி 1948ல் G. C. I. M. பாடத்திட்டத்துக்கு ஸமமாக இந்திய வைத்தியத்தில் ஒரு பாடத்திட்டத்தைத் தயாரித்தது. 1956ல் தவே கமிட்டி சோப்ரா கமிட்டியின் பாடத்திட்டத்தை ஒட்டியே ஒரு பாடத்திட்டத்தைத் தயார் செய்தது.

### இந்திய வைத்யத்தின் சரிவு காலம்.

1947-ல் ஸம்ஸ்க்ருத ஜ்ஞானத்துடனுள்ள இன்டர் மீடியட் மாணவர்கள் ஆயுர்வேத வகுப்பிற்கும் தமிழ்ஜ்ஞானமுள்ளவர்கள் சித்தத்துக்கும், உருது படித்தவர்கள் யூநானி வகுப்புக்கும் சேர்க்கப்பட்டார்கள். ஆயுர்வேதம் பயிலும் மாணவர்களுக்கு மேலும் ஸம்ஸ்க்ருத ஜ்ஞானத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஸம்ஸ்கிருதம் போதிப்பதற்கு ஒரு பண்டிதரும் நியமிக்கப்பட்டார். மாணவர்கள் சரக ஸம்ஹிதை, ஸுச்ருத ஸம்ஹிதை, அஷ்டாங்கஹ்ருதயம் போன்ற மூலக்ரந்தங்களின் பகுதிகளைப் படித்து அறிந்து கொள்ளக்கூடியவர்களாயிருந்தனர். எனினும், 1952-ல் அரசாங்கம் ஆயுர்வேத வகுப்பில் மாணவர்சேருவதற்கு ஸம்ஸ்க்ருதஜ்ஞானம் அவசியமில்லை என உத்தரவை மாற்றியது. சென்னை ராஜ்யத்தில் இண்டர் மீடியட்டில் விஞ்ஞானம் - ஸம்ஸ்க்ருதம் எடுத்துக் கொள்பவர்கள் அதிகமின்மையால் இம்மாறுதல் செய்யப்பட்டது. பண்டிதருடைய ஸ்தானமும் 1954-ல் ரத்து செய்யப்பட்டது.

1954-ல் இந்திய சஸ்த்ர வைத்யம், ப்ரஸூதி தந்த்ரம் சுகபரிபாலனம், அகததந்த்ரம் இவைகள் பரீக்ஷைக்குரியதல்லாததாக்கப்பட்டதால் அதை அநுஸரித்து பாடத்திட்டத்திலிருந்தும் விலக்கப்பட்டது. அவைகளுக்கு அளிக்கப்பட்ட காலம் மேனாட்டு வைத்ய முறைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இப்போது விகிதாசாரம் இந்திய வைத்யத்துக்கு மூன்றில் ஒரு பங்கும் மேனாட்டு முறைக்கு மூன்றில் இரண்டு பங்குமாகியது.

1955 ஜுலையில் மேற்பார்வை நிர்வாஹம் மெடிகல் ஸர்வீஸ் டைரெக்டருக்கு மாற்றப்பட்டது. இதே வருஷ அக்டோபரில் புதிதாக சென்னை - ஸ்டான்லி மெடிகல் காலேஜுகளிலிருந்து அலோபதி ஆசிரியர்கள் மேனாட்டு முறை கற்பிப்பதை விருத்தி செய்வதற்காக இங்கு மாற்றப்பட்டார்கள்.

சஸ்த்ரகர்ம, பிரஸவ - வார்டுகள் ஒவ்வொன்றும் 50 படுக்கைகளுக்கு உயர்த்தப்பட்டு, 40 படுக்கை வஸதி கொண்ட அலோபதி சிகித்ஸைக்கு ஒரு வார்டும் ஏற்படுத்தப்பட்டு, படுக்கைகளின் எண்ணிக்கை 210-லிருந்து 270-க்கு உயர்த்தப்பட்டது.

G. C. I. M. பாடத்திட்ட காலம் 5 வருஷங்களிலிருந்து 4½ வருஷங்களாகவும் ஜில்லா தலைமை ஆஸ்பத்திரிகளில் 1 வருஷம் கட்டாயப் பயிற்சி எடுத்துக்கொள்ளும்படியும் மாற்றப்பட்டது. இது 1954-லிருந்து அமுலிலிருக்கிறது. இப்பயிற்சி ஆலோபதி வைத்யத்துக்கு மட்டுமே. இந்திய வைத்ய விஷயங்கள் பரீக்ஷைக்கு 10-லிருந்து ஐந்தாகக் குறைக்கப்பட்டன.

1951-ல் ஒரு விரிவுரையாளர் நியமிக்கப்பட்டு அவரிடம் ஸம்ஸ்கிருதத்தில் பாடப் புத்தகங்கள் எழுதவும், பின்னர் அவற்றை ஆங்கிலத்திலும் மற்றைய பிரதேச பாஷைகளிலும் மொழிபெயர்ப்பதற்குமான காரியங்கள் ஒப்படைக்கப்பட்டன. குணபாடம், ரோகவிஞ்ஞானம் இவை எளிய ஸம்ஸ்க்ருத வாக்யங்களில் எழுதப் பட்டன. இது உயரிய ஸம்ஸ்க்ருத மூல புத்தகங்களையும் முக்யாமுக்யங்களையும் புரிந்துகொள்ள முடியாமலிருக்கும் மாணவர்களுக்கு உபயோகமாவதற்காகச் செய்யப்பட்டது. எனினும் இந்த ஸ்தானமும் 1955-ல் ரத்து செய்யப்பட்டு அத்திட்டமும் கைவிடப்பட்டது. இக்கைப் பிரதியும் இன்னும் அரசாங்க இலாகாவிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதேபோல் ஸித்தமுறையிலும் எழுதப்பட்டும் ஓரளவு அச்சிடப்பட்டதுமான பாடப்புத்தகங்களையும் நிறுத்தும்படி உத்திரவிட்டது.

மேற்கூறியவைகளிலிருந்து இந்த ஸ்தாபனத்தின் 30 வருஷ காலத்தில் ஒரு உறுதியான கொள்கை இந்திய வைத்யத்தைக் கற்பிப்பதில் இல்லையென்பது தெளிவாகிறது. 1925-முதல் 1947-வரை அவ்வப்போது பாடத்திட்டங்களின் இந்திய வைத்யர்களடங்கிய நிபுணர்களின் குழுவினருக்கு ஒருவித தகவலுமில்லாமல் நிர்வாஹத்தினரின் உத்தரவுகளால் மாற்றப்பட்டு வந்திருக்கின்றன. அதன்பயனாக காலேஜ் தன் நிலையிலிருந்து — இந்திய வைத்தியத்தின் எல்லாத் துறைகளிலும் சிறந்த அறிவு புகட்டப்படவேண்டுமென்ற கொள்கையிலிருந்து — நழுவியதுடன் மென்மேலும் இந்திய வைத்யத்திற்குப் பாதகம் ஏற்படும் வகையில் அலோபதி வைத்யம் புகுத்தப்பட்டது. ஆகவே, காலேஜிலிருந்து இந்திய வைத்ய முறையில் பதார்த்த



விஞ்ஞானம், அடிப்படைத்தத்வங்கள், காய சிகித்ஸை — ஆகிய மூன்று விஷயங்களை மட்டில் கற்று வெளிவந்த சிலர் இருக்கின்றனர். இந்த பட்டதாரிகள், இவ்வகை ஸாதனங்களுடன், தாம் இந்திய வைத்ய முறையில் தொழில் புரிய போதிய திறமையில்லாதவர்களாக நினைத்து அலோபதி வைத்ய ஸ்தாபனங்களில் நியமனம் பெற கிளர்ச்சி செய்கிறார்கள். தத்காலம் G. C. I. M. பட்டதாரிகளை இரண்டாந்தர சுகாதார அதிகாரிகளாகவும், ஜூனியர் உதவி ஸர்ஜன்களாவும் நியமிக்கப்படுவதிலிருந்து அவர்கள் இந்திய முறை வைத்யசாலைகளில் தொழில் புரிவதைவிட அலோபதி வைத்யசாலைகளில் வேலைசெய்ய அதிகம் தகுதி வாய்ந்தவர்களென்பது புலனாகிறது. ஆகையினால் இந்திய வைத்ய முறை உயிர்ப்பிக்கப்பட்டு ஆதரிக்கப்படவேண்டுமென்ற அரசாங்கத்தின் உறுதியான நோக்கம் கடந்த பத்து ஆண்டுகளில் ஈடேறாமலிருப்பதுடன் இந்திய வைத்ய காலேஜின் மான்ய வசதிகள் அனைத்தும், தகுதி பெற்ற அலோபதி வைத்யர்களால் கீழ்த்தரமாகக் கருதும் இக்கல்லூரி பயில்விக்கும் அலோபதி வைத்யத்திற்கே செலவிடப் படுகிறது. இந்நிலைமை மேலும் பத்து வருஷங்களுக்கு நீடித்தால் பிறகு கீழ்ப்படிப்பில் இந்திய வைத்தியத்தின் பகுதிகளனைத்தும் கற்பிக்கப்படாததாலும் மேற்படிப்புக்கு வசதி அளிக்கப்படாததாலும் இந்திய வைத்யத்தைக் கற்பிக்கத் தகுதிவாய்ந்த ஆசிரியர் கிடைக்க மாட்டார். இச்செய்கை அரசாங்கம் இந்திய வைத்யத்தில் அரைகுறை வைத்யர்களை உண்டாக்குவதையே நிலைநிறுத்தும். இணைப்பு வைத்யக்கல்லூரியின் க்ரமமான இக்குறைவுபாட்டுக்குக் காரணம் அரசாங்கத்தை விட அதைப் பரிபாலிப்பவர்களையே முக்கியமாகச் சாரும். இக்கல்லூரியின் பரிபாலனம் ஆரம்பமுதலே இந்திய வைத்யத்தில் பலதரப்பட்ட விருப்பு வெறுப்புகளையுடைய மேனாட்டு முறையில் பயின்றவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

## எதிர்காலவாய்ப்பு — நமது பிற்காலத் தேவை.

அரசாங்கம் தங்களுக்கு இந்திய வைத்ய முறையை அபிவிருத்தி செய்யும் நோக்கமிருப்பதாகக் கூறுவது உண்மையாக இருந்தால், அப்போது இந்திய முறை வைத்யத்தைக் கையாள்பவரிடத்தில் பரிபாலனத்தை ஒப்படைத்தல் என்ற ஓரே வழி தான் உண்டு. இந்திய யூனியனில் அநேகமாக எங்கெங்கு இந்திய முறை வைத்யத்திற்கு தனித்த இலாகா இருக்கின்றதோ; அங்கெல்லாம் அவ்விலாகாவின் பரிபாலனம் இந்திய வைத்யமுறையில் தொழில்புரிபவர்களின் கையிலேயே ஒப்

படைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக - கேரளம், மைஸூர், ஸௌராஷ்ட்ரம், உத்தரப்ரதேசம் - இந்த ராஜ்யங்களில் இந்திய வைத்ய முறையில் தேர்ச்சி பெற்றவர்களே டைரெக்டராகவும், ப்ரின்ஸிபாலாகவுமிருப்பதைப் பார்க்கலாம். இவர்களுக்கு இருவகைப்பட்ட விருப்பின்மையால் இவர்களுடைய பரிபாலனம் பந்தோபஸ்தாகவும், வளர்ச்சியுள்ளதாகவும் இருக்கிறது. சென்னை அரசாங்கம் கடந்த 33 ஆண்டுகளாக அலோபதி வைத்ய முறையில் தேர்ச்சி பெற்ற தங்கள் வைத்யர்களையே இந்திய முறை வைத்யப் பள்ளிக்குத் தலைவராக நியமித்ததால் தீய விளைவு உண்டாகியதுடன் இந்திய வைத்ய முறையும் அடியோடு புறக்கணிக்கப்பட்டு மேனாட்டு முறையே வளரும் சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. இப்போது நாங்கள் கேட்பதெல்லாம் நல்வழியில் இந்திய முறை வைத்யர்களின் கையில் அதிகாரத்தை ஒப்புவித்து அவர்கள் தங்கள் முறைகளைத் தாங்களே வகுத்துக் கொள்ளுவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதே.

பாடத்திட்டம் - போதனாமுறைகள் — இவைகள் இந்திய முறை வைத்ய நிபுணர்களடங்கிய குழுவினரால் தயாரிக்கப்படவேண்டும். இப்போது பாடப்புத்தகங்கள் ஸம்ஸ்கருதத்திலும் பிரதேச பாஷைகளிலும் இருப்பதால் ஆரம்ப காலத்தில் சொல்லிக்கொடுப்பதற்கு சிரமமேற்படாது. சென்னை ஸர்வ கலாசாலையிலுள்ள B. I. M. வகுப்புப் பாடத்திட்டத்தை தேவையான தக்க மாறுதல்களுடன் ஆரம்பித்து, G. C. I. M. வகுப்பை ரத்து செய்யும்படியாகவும் நாங்கள் தூண்டுகிறோம். அரசாங்கத்துக்கு இந்திய வைத்யப் பள்ளிக்கூடத்தை காலேஜ் அந்தஸ்துக்கு உயர்த்தியதன் நோக்கம் எவ்விதமிருந்தாலும், அந்நோக்கம் நன்கு நிறைவேறுததுடன், மறுபக்கம் இந்திய முறை வைத்யத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டியது போக கீழ்த்தரமான அலோபதி வைத்யமுறை ஸ்தாபனமாக ஏற்பட்டு விட்டது. நகரில் ஏற்கனவே இரண்டு வைத்யக் கல்லூரிகளும் வெளியூரில் ஒரு கல்லூரியும் இருந்த போதிலும் ஸமீப காலத்தில் மேலும் ஓரிரண்டு கல்லூரிகள் ஆரம்பிக்கப்படலாமெனத்தெரிகிறது. நாங்கள் விரும்புவதெல்லாம் இந்திய வைத்ய முறைக்காக உள்ள ஒரே ஸ்தாபனமான இக் கலாசாலை அமுக்கப்பட்டு அதன் மான்ய - வசதிகளைக் கொண்டு அதை மற்றொரு அலோபதி காலேஜாக மாற்றி துர்விநியோகப்படுத்த வேண்டாமென்பது தான். தத்காலம் அமுலிலுள்ள G. C. I. M. பாடத்திட்டம் இப்போதுள்ள மாணவர்களின்



படிப்பு முடியும் வரையில் நீடிக்கப்படலாம். இதே ஸமயத்தில் சென்னை யூனிவர்ஸிடியிலுள்ள B. I. M. வகுப்புத் திட்டத்தை இந்திய வைத்ய முறையைக் கற்பிப்பதற்கான ஸகல வஸதிகளுடனும், தொழில் புரிய வாய்ப்புகளுடனும் 1959 ஜுலை முதலே அந்தக் கட்டடங்களிலேயே ஆரம்பிக்கவேண்டும். இப்போது இணைப்புக்கலாசாலைக்கு ஏற்பட்டிருக்கும் எல்லா வஸதிகளையும் புதுப்பாடத் திட்டத்திற்கே உபயோகிக்க வேண்டும். தத்காலத் தேவைக்கு வேண்டிய பாடபுத்தகங்கள் தயாரிப்பதற்கு அவசியமேற்படலாம். இப்போது கிடைக்கக் கூடிய பழைய மூலக்ரந்தங்கள் மேற்படிப்புக்குத் தகுதியானவை. நாம் குறிப்பிட்ட காலத்துக்குப் பாடத்திட்டம் வகுக்கும்போது திட்டத்துக்குத் தக்கபடி பாடப் புத்தகங்கள் அமைப்பது முக்யம். பாடபுத்தகங்கள் எழுதுவது அரசாங்க ஆதரவின்கீழ்தான் இயலும். இந்திய வைத்யத்தின் எல்லாப் பகுதிகளிலும் பாடப்புத்தகத்தை அமைக்க இந்திய வைத்ய நிபுணர்களடங்கிய ஒருகுழு நியமிக்கப்படவேண்டும்.

இந்திய வைத்ய முறை வளர்ச்சியடையவேண்டுமானால் சிகிச்சாசாலைகள் பல ஏற்படவேண்டும். இதுவரை கிராமங்களிலும் சில முனிஸிபாலிடிகளிலும் சிறிய வைத்யசாலைகளே அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நகரிலும் தங்கி சிகிச்சை பெறக்கூடிய ஸ்தாபனம் நிறுவப்பெறாவிடில் இந்திய வைத்யத்தின் பெருமையை அளவிட்டுக் காண்பிக்க இயலாது. சென்னையில் ஒரே ஒரு இத்தகைய சிகிச்சாசாலை இருக்கிறது. அதன் வாழ்வு தாழ்வுகள் இணைப்புக் கல்லூரியில் வேலைசெய்யும் ஒரு சில வைத்யர்களையே பொறுத்திருக்கிறது. அங்கு இந்திய முறை வைத்யத்தின் பெருமையை அறிய விரிவான வாய்ப்பு இருக்கவேண்டும். ஆகவே இத்தகைய அநேக சிகித்ஸாசாலைகள் ஏற்பட வேண்டியது அவசியமாகும்.

1933-55-வருஷங்களில் இந்திய வைத்யத்துக்கு ஒரு மத்ய ஸ்தாபனம் இருந்தது. 56-முதல் 58வரை இரண்டுவருஷங்களுக்கு அது நியமனம் பெற்றிருந்தது. இந்த போர்டும் இரண்டு தவணைகளாக இயங்கவில்லை. ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்தல் நடத்துவது அவசியமாகும் இந்த பிரதிநிதிகள் அரசாங்கத்துக்கு ஓரளவு இந்திய வைத்யத்தில் ஆலோசனை கூறுபவர்களாக இருப்பார்கள். அத்தகைய போர்டு மறுபடியும் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவஸரமான முக்ய காரியமாகும்.

இந்திய முறைக்கு - அலோபதி முறைக்கு அதிகமாக இல்லாவிட்டாலும் - ஸமமான அந்தஸ்தையாவது வழங்க ஆவன செய்ய அரசாங்கத்தின் அந்தரங்க சுத்தியை நாங்கள் ஸந்தேஹிக்கவில்லை. அரசாங்கத்துக்கு ஆலோசனை சொல்பவர்களின் இந்திய வைத்தியத்தில் தங்களுக்குள்ள வெறுப்பின் காரணமாகவோ, அதன் பிற்கால வைத்யக் கூறுகளின் தன்மையை ஸரிவர புரிந்து கொள்ளாமையினாலோ அரசாங்கம் அதன் முயற்சியில் வெற்றி பெறவில்லை. இப்போது சர்க்கார் சரியான ஆலோசனைகளைத் தருந்தவர்களிடமிருந்து பெறுவர்களென்று நாங்கள் உணருகிறோம். உயரிய இந்திய வைத்ய முறைப்படி தொழில் புரியும் நாங்கள் அரசாங்கத்துக்கு இவ் விஷயமாக உருவாக்கக்கூடிய ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்க எப்போதும் ஸித்தமாயிருக்கிறோம்.

## மந்திரியாரிடம் மஹஜர்.

திருச்சி விசேஷ மகாநாட்டில் அங்கத்தினர் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களைக்கொண்டு தயாரித்த மேற்கண்ட மஹஜரை கனம் சுகாதார மந்திரி மாணிக்கவேலர் அவர்களிடம் பிஷக்ரத்ன ஸ்ரீ A. ராகவராவ் மஹாமண்டலத்தலைவர், ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ ஆயுர்வேதாசார்ய, அகிலபாரத ஆயுர்வேத வித்யாபீடத்தலைவர், ஸ்ரீ V. ஸுப்ரமணிய அய்யர் ஆயுர்வேதஸேவாப்ரவீண, திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர், ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி ஆயுர்வேத ஸபைத்தலைவர், ஸ்ரீ T. S. ஈசுவர அய்யர், மகாமண்டலக்காரியதர்சி இவர்களடங்கிய தூது கோஷ்டி திருச்சியில் ஸமர்ப்பித்தது. மந்திரி அவர்கள் பேட்டிகாண வந்த வைத்யர்களிடம் ஒருமணி நேரம் பேசி அனேக விஷயங்களுக்கு விளக்கம் தெரிந்துகொண்டார். சர்க்கார் இது விஷயத்தை நல்லெண்ணத்துடன் பரிசீலித்துக் கவனிப்பதாக வாக்களித்தார்.

13812


# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

**அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,**

*சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS.**

**MUSK MERCHANTS,**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்டாக்குகளுக்கு எழுதினால் இனமாக அனுப்பப் பெறும்.

**'மார்த்தண்ட' வின் ஆயுர்வேத இஞ்சக்ஷன்கள்.**

சீக்ரத்தில் குணமளிக்கும்
இந்த எட்டு வித இஞ்சக்ஷனைக் கவனியுங்கள்!

நவீன ஸம சீதோஷ்ண வசதியும் புதிய இயந்திரங்களும் அமைந்த 'மார்த்தண்ட' மருந்து-தயாரிப்பு சாலையில் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்று தகுதி வாய்ந்த ரஸாயனிகளால் தயாரிக்கப் பெற்ற எட்டு வகை இஞ்சக்ஷன்களான ஸோமா ச்வாஸகாஸங்களிலும், சூலாந்தக எல்லா வாயு வலிகளிலும், ஸ்ம்ருதிதா உன்மாத மூர்ச்சைகளிலும், ஹ்ருதயாம்ருத ஹ்ருதய பலஹீனத்திலும், தாபிகா ஜன்னி ஜல தோஷங்களிலும், மருதாசீ வாதரோகங்களிலும், ப்ரதராரி பெரும்பாட்டிலும்; க்லீபாந்தக நபும்ஸகத்திலும் உடனே ஆச்சர்யமாய் குணமளிக்கின்றன, இவைகளை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள், ஆராய்ச்சிக்காகப் பயன்படும் படங்களடங்கிய மார்த்தண்ட மாதப் பத்ரிகையை இலவசமாகப் பெறுங்கள். இவை தவிர ஆஸவம் அரிஷ்டம் பஸ்மம் சூர்ணம் முதலியவைகளும் சாஸ்த்ரீய முறை தவறாது தயாராகின்றன. கடிதங்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

**MARTAND PHARMACEUTICALS,**

**(Research Institute of Indian Medicines)**

**BARAUT S. S. Rly. (U. P.)**

**தி இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185**

லேட்டிஸ் பிரிட்ஜ்ரோட், அடையாறு, மதராஸ் 20.

தபால் பெட்டி நெ. 007. போன் நெ. 71628.

ப்ரஸிடெண்ட் :— வைத்யரத்ன, கேப்டன்
G. ஸ்ரீனிவாஸமூர்த்தி, பி. ஏ., பி. எல்., எம். பி. ஸி. எம்.

வைஸ்பிரஸிடெண்ட் :—
டாக்டர் Y. சூர்யநாராயண ராவ், எல். ஐ. எம்.

அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை :— ரூ. 100,000
(பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 20,000 பங்குகள் கொண்டது)

| | | |
|---|---|---|
| வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை | ... | ரூ. 65,395 |
| சங்கத்தின் க்ஷேம நிதி | ... | ரூ. 1,89,586 |
| சங்கத்தின் இதர நிதிகள் | ... | ரூ. 2,22,105 |

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள தேசிய இந்திய வைத்தியர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசிய வைத்தியர்களும் இந்த சங்கத்தில் மெம்பராகச் சேரலாம்.

பங்கு ஒன்றுக்கு ரூ. 5-00. பிரவேச கட்டணம் 25 நயாபைசாக்கள்)

2. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசிய மருந்துகள், சாஸ்த்ரீய முறைப்படியும், தக்க மேற்பார்வையுடனும் தயார் செய்து, தேசிய மருந்துகளைக் கையாளும் வைத்தியர்களுக்கு சப்ளை செய்யும் சிறந்த கூட்டுறவு சங்கம்.

— எமது வெளியீடுகள். —

1. வைத்ய யோகரத்னாவளி ஆங்கில பிரதி ரூ. 6—00
   ,, தெலுங்கு பிரதி ரூ. 6—50
2. சித்த பார்மகோபியா ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00
3. யூனானி பார்மகோபியா ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00

(தபால் கட்டணம், விற்பனை வரி பிரத்தியேகம்.)

கிளை அலுவலகங்கள் :—

(1) 20/320, பெட்டி பொட்டலவாரி தெரு, கவர்னர் பேட்டை, விஜயவாடா-2. (ஆந்திர ராஜ்யம்.)

(2) 88, ஆற்காடு சீனிவாச ஆச்சாரி தெரு, பெங்களூர்-2. (மைசூர் ராஜ்யம்,)

(3) கோவாபரேடிவ் அர்பன் பாங்கு கட்டிடம், கல்லை ரோடு, கோழிக்கோடு-2. (கேரள ராஜ்யம்.)

(4) நகர விற்பனை டிப்போ, 4/136, மவுண்ட் ரோடு, மதராஸ்-2. டெலிபோன் நெ. 86520.

VAIDYACHANDRIKA DECEMBER—1958 Regd. No. M. 4018.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரிக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்
கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்ஜீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எளிதிலேயிலும்
போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் சிறந்த ஔஷத
எங்கும் கிடைக்கும்.

❋

தயாரிப்பவர் :—

சக்தி விலாஸ வைத்தியசாலா,
கரூர். (S. Ry.)

Printed at the Srivilasam Press, Srirangam and Published by
S. V. Radhakrishna Sastri for Tamilnad Ayurveda Maha Mandalam,
Bharat Ayurveda Sala, 27, Chinnakadai Street, Teppakulam, Tiruchy.
Editor: S. M. Sundararajacharyar, Srirangam.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |